இயந்திரவியல் பொறியியல் பெற்ற உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பெற்ற தொழிநுட்பவியல் டிப்ளோமா

***(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு.- இலத்திரனியல் பொறியியல் அதிகாரி - ஆண் (நிரந்தர) :***

குறைந்தபட்சம் 4 வருட இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது 4 வருட பௌதிக விஞ்ஞானம் (மேஜர்) உடன் இலத்திரனியல்/ தொலைத்தொடர்பு பிரதான பாடமாக பிஎஸ்சி பட்டம் அல்லது 3 வருட பௌதிக விஞ்ஞானம் விஞ்ஞானமாணி பட்டத்துடன் இலத்திரனியல் தொலைத்தொடர்பானது பிரதான பாடமாக அல்லது 3 வருட டிப்ளோமா இலத்திர னியல்/தொலைத் தொடர்பு பொறியியல்

***வலையமைப்பு பரிபாலகர் அதிகாரி - ஆண்/பெண் (நிரந்தர) :***

4 வருட கணனி தொடர்பான பிரிவில் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது 3 வருட கணனி தொடர்பான பிரிவில் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது கணனி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக விஞ்ஞானமாணி பட்டம் அல்லது எச்என்டீ அல்லது என்ஐபிஎம் டிப்ளோமா அல்லது வலையமைப்பு பரிபாலகர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

***மென்பொருள் விருத்தியாளர் - ஆண்/பெண் (நிரந்தர) :***

4 வருட பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம், கணனி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட விஞ்ஞானமாணி பட்டம், கணனி தொடர்பான பிரிவில் விஞ்ஞானமாணி பட்டத்துடன் கணனி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது எச்என்டீ அல்லது என்ஐபிஎம் டிப்ளோமா அல்லது மென்பொருள் விருத்தி யாளர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவத்துடன்

***தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் :***

கணனி தொடர்பான பிரிவில் 4 வருட பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது கணனி தொடர்பான பிரிவில் 3 வருட விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பிரதான பாடமாக கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பட்டத்துடன் கணனி அல்லது எச்என்டீ அல்லது என்ஐபிஎம் டிப்ளோமா தகவல்/பாதுகாப்பு விசேட நிபுணர் சமனான நல்ல அறிவு மற்றும் அனுபவத்துடன்

***இணையதள வடிவமைப்பாளர் :***

4 வருட கணனி பொறியியல்/தகவல் தொழிநுட்பம்/கணனி விஞ்ஞானத்தின் விஞ்ஞானமாணி அல்லது 3 வருட கணனி பொறியியல்/ தகவல் தொழிநுட்பவியல்/ கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது பிரதான பாடமாக கணனி விஞ்ஞானத்துடன் விஞ்ஞானமாணி பட்டம் 3 வருட தகவல் தொழிநுட்பம் தொடர்புபட்ட பட்டம் அல்லது விஞ்ஞானமாணி பட்டம் அல்லது எச்என்டீ அல்லது என்ஐபிஎம் டிப்ளோமா அல்லது அதற்கு சமமான தகைமையுடன் குறைந்த பட்சம் 1 வருட அனுபவம்

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரர்களும் எழுத்து, செயன் முறைப் பரீட்சைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

சகல விஞ்ஞானமாணி பட்டங்களும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களினின்றும் பெற்றிருத்தல்

***(இ) பல் வைத்தியப் பிரிவு.- பல் அறுவை மருத்துவர் - ஆண்/ பெண் (நிரந்தர/தொண்டர்)***

***ப்ளயிட் லெப்டினன்ட்*** - பிடீஎஸ் அல்லது அதற்குச் சமனான தகைமையுடன் எஸ்எல்எம்சி பதவி

***பல் மருத்துவ மாணவன் - ஆண்/பெண் (நிரந்தர)***

***பைலட் ஒபீசர்*** - பிடீஎஸ் 2 வருட பூர்த்தியும் 3 ஆம் வருட ஆரம்பமும்

***ப்ளையிங் ஒபீசர்*** - இறுதி பிடீஎஸ் முதற்கட்டம் முழுமையான பிறகு இறுதி வருடம் பிடீஎஸ் பயிலுதலும்

***(ஈ) பரிபாலன மிருக வைத்தியப் பிரிவு.- மிருக வைத்திய அதிகாரி - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

பேராதனை பல்கலைக்கழகத்தில் மிருக வைத்தியராக பட்டம் பெற்றிருத்தலுடன் இலங்கை மிருக வைத்திய சபையில் அங்கீகாரம் பெறல் வேண்டும்

***(உ) பரிபாலன விவசாயப் பிரிவு.- விவசாய அதிகாரி - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சகல பிஎஸ்சீ விவசாய விஞ்ஞான பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமை இருத்தல்

***(ஊ) பரிபாலன நீதிப் பிரிவு.- நீதி அதிகாரி- ஆண்/பெண் (நிரந்தர/தொண்டர்)***

நீதிப்பட்டம் பெற்றிருத்தலுடன் 1 வருட வழக்கு தொடுக்கும் அனுபவம். எம்ஓயூ உம் ஆவணம் தொடர்புபடுத்தும் திறமையும்

***(எ) பரிபாலன கல்விப் பிரிவு.- ஆங்கில மொழி விரிவுரையாளர் - ஆண் (நிரந்தர/தொண்டர்)***

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எந்தப் பிரிவிலாவது 3 சாதாரண சித்தியும் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில மொழி தொடர்பான 3 வருட கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியான பிறகு ஆங்கில மொழி ஆசிரியராக குறைந்தபட்சம் 1 வருட காலம் அனுபவம் இருத்தல் அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் எந்தப் பிரிவிலாவது 3 சாதாரண சித்தியும் மற்றும் தேசிய கல்வி திணைக்களத்தில் ஆசிரிய கலாசாலையில் 2 வருட ஆங்கில மொழி தொடர்பான கற்கைநெறி வெற்றிகரமாக பூர்த்தியான பிறகு ஆங்கில மொழி ஆசிரியராக குறைந்தபட்சம் 3 வருட காலம் அனுபவம் இருத்தல் அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தால் ஆங்கிலத்தில் பிஏ/பிஎஸ்சி பட்டம் பெற்றிருத்தல் அல்லது ஆங்கிலம் ஒரு பாடமாக எம்ஏ/எம்எஸ்சி பட்டம் பெற்றிருத்தல் அல்லது

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

*சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை – 2012*

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சைக்குத் தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 2012.02.14 ஆந் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இப்பரீட்சை 2012, வைகாசி மாதத்தில் கொழும்பில் நடைபெறும்.

1. **தகைமைகள்**:- இப்பரீட்சைக்காக விண்ணப்பதாரிகள் கீழ் வரும் தகைமைகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் :-

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;
(ii) வயது 25 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் ;
(iii) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதத்துடன் மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;
(iv) சாரதி ஆலோசகராக தான் விண்ணப்பிக்கும் வகுப்பு வாகனங்களை ஓட்டுவதற்கு விண்ணப்பத் திகதிக்குக் குறைந்தது 05 வருடங்களுக்கு முன்னதாகப் பெறப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தை அவர் கொன்டிருத்தல் வேண்டும்.

(அரச/ கூட்டுத்தாபனமொன்றிலோ அல்லது நியதிச் சட்ட சபை ஒன்றிலோ பதவி வகிக்காதவராக இருத்தல் வேண்டும்)

2. **பரீட்சை முறை**:- (அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். (விண்ணப்பதாரிகள் தகைமை பெற்ற மொழியில்)

(ஆ) சகல வினாப்பத்திரங்களும் ஒரு மொழியில் மாத்திரம் விடை அளிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்கான மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

3. **பரீட்சைக் குறிய பாடங்கள்**:- இப்பரீட்சை மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் பற்றிய இரு பிரிவுகளைக் கொண்ட வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும்.

(i) மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் - 1 (1 மணித்தியாலம்)

(ii) மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் 2 (2 மணி 30 நிமிடம்)

முதலாம் வினாத்தாள் 50 பன்முகத் தெரிவு வினாக்களை உள்ளடக்கியதாகவும், இரண்டாம் வினாத்தாளில் முதலாம் வினா, சுருக்கமான விடையளிக்கும் கட்டாய வினாவாகவும், ஏனைய நான்கு வினாக்களுக்குமாக அனைத்து (05) வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.

4. **பாடத்திட்டம்**.- இவ்வினாப்பத்திரங்கள் இரண்டிலும் இலங்கையின் வீதிப் போக்குவரத்து சட்ட திட்டங்கள், மோட்டார் வாகன தொழில்நுட்ப அறிவு, வாகனம் செலுத்தும் ஆற்றல் என்பன பற்றிய வினாக்கள் அடங்கும்.

இவ்வினாத்தாள் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய தாக இருக்கும் :-

(அ) ஓட்டுனர் ஒருவரது பண்பு: சிறந்த ஓட்டுனர் ஒருவரால் மட்டுமே சிறந்த பயிற்றுனராக இருக்க முடியும் ;

(ஆ) ஆசிரியர் ஒருவராக, வாகனப் பயிற்றுனர் ஒருவரின் பொறுப்பு, மனப்பாங்கு, திறமைகள் என்பன ;

(இ) மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனப் பயிற்சிப் பாடசாலைகள் மற்றும் வாகனப் பயிற்றுனர்கள் தொடர்பான ஏற்பாடுகள் ;

(ஈ) மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பான அறிவு;

(உ) பெருந்தெரு ஒழுங்குவிதிகளும் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் பற்றிய அறிவும் ;

(ஊ) மோட்டார் வாகனப் போக்குவரத்து சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்மாணங்கள் : வாகன ஓட்டுனர் பயிற்சியாளர் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அமைவான ஒழுங்குவிதிமுறைகள் ;

(எ) வாகனம் ஓட்டும் பயிற்சி கைநூல், வாகனப் பயிற்சி ஆலோசனைக் கைநூல் மற்றும் அவற்றின் பாடத்திட்டம் ;

(ஏ) வாகன பராமரிப்பு, வாகன செயன்முறை மற்றும் வாகனத்தின் பிரதான இயந்திர தொழினுட்பவியல் தொடர்பான அறிவு -

* இயந்திரம் மற்றும் இயந்திர சக்கரப் பொறிமுறை சாதனம் தொடர்பான அறிவு ;
* வாகனத்தை இயக்கும் சுக்கான் (Steering wheel) தொடர்பான அறிவும் அதன் செயற்பாடும்;
* சமநிலைப்படுத்தும் பொறிமுறை (Suspension) மற்றும் அதன் செயற்பாடும் ;
* வாகன இயக்கத் தடை (Break system) பற்றிய அறிவும் அதன் செயற்பாடும் ;
* மின்சார முறைமை பற்றிய அறிவும் அதன் செயற்பாடும்.

5. **தெரிவு செய்யும் முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் செய்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்பத்திரம் இவ்வறி வித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக அமைந்திருக்க வேண்டியதுடன், அது 8½" X 12" அளவுகளில் முழுத்தாளின் (foolscap) இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவம், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவ தற்கு எண்ணியுள்ள மொழியிலேயே பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான காசுக் கட்டளை பற்றுச் சீட்டு இலக்கம், வழங்கப்பட்ட தபால் நிலையம் மற்றும் திகதி :----.

10. ஆலோசகராவதற்கு விண்ணப்பிக்கும் வாகன வகுப்பு :----.

11. விண்ணப்பதாரியால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள-

(i) சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :----.

(ii) வழங்கிய திகதி :----.

(iii) செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள வாகன வகுப்புக் கள் :----.

விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் நான் அறிந்த வரையில் சரியானதும், உண்மையானதும் என உறுதி மொழிவதுடன், என்னால் வழங்கப்பட்டுள்ள தரவுகள் ஏதேனும் தவறானவை என உறுதிப்படுத்தப்படுமிடத்து சாரதி ஆலோசகராகப் பதிவு செய்யப்பட நான் தகுதியற்றவனாவேன் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட பின் தெரியவருமிடத்து பதிவை இரத்து செய்ய முடியு மென்பதனையும் நான் அறிவேன். இப்பரீட்சை விதிமுறைகளைப் பின்பற்ற நான் சம்மதிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

குறித்த விண்ணப்பதாரி இன்று என் முன்னிலையில் கையொப்ப மிட்டார் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தியவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

1-364